1984 மார்ச் 24]

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஊசி நத்தத்தில் உள்ள அணையில் வலது பக்கத்தில் உள்ள தண்ணீர், ஊசிநத்தம் விவசாயிகளுக்கும், இடது பக்கம் உள்ள தண்ணீர் வையாவூர், மாம்பட்டு ஆகிய இடங்களுக்கும் செல்கிறது, அந்த ஏரியில் இருந்து 3 கிராமங்களுக்கு நீர் செல்ல வேண்டியிருப்பதால், அதை 3-பிரிவுகளாகப் பிரித்து, அந்த மூன்று கிராமங்களுக்கும் சரிசமமாக தண்ணீரைப் பகிர்ந்து கொடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 1984-85 ஆம் ஆண்டில் விரிவாக்கம் மற்றும் மேம்பாடு என்ற தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் செய்யப் பெறவேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக 1984-85 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்தப் பணிகள் துவக்கப்படவிருக்கின்றன என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தத் திட்டப் பணிகள் எவ்வளவு காலத்திற்குள் முடிவு அடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே இரண்டு வென்ட்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அந்த இரண்டு வென்டகள் மூலம் 3 கிராமத்திற்குத் தண்ணீர் செல்ல வேண்டியிருப்பதால், பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதால், 3 கிராமங்களுக்கும் சமமாக தண்ணீர் விடுவதற்காக 3 வென்ட்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கும் வகையில், உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, 1984-85 ஆம் ஆண்டில் அந்தப் பணிகள் துவக்கப்பட வேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலும் கூடுதலாக எந்தவிதமான விவரமும் சொல்ல முடியாத நிலையில் நான் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்த்தாண்டத்தில் செயல்பட்டு வரும் தொழிற்பேட்டை.

445—* வினா எண் 19171—திரு. டி. மணி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மார்த்தாண்டத்தில் செயல்பட்டு வந்த தொழிற்பேட்டையில் இப்போதுள்ள தொழில் என்ன ?

(ஆ) கயிறு மெத்தை தயாரிக்கும் தொழில் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : (அ) கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் தொழிற்பேட்டையில் உள்ள மூன்று தொழிற்கூடங்களில், தொழில் நடத்துவோருக்கு இரண்டு கூடங்களும், மற்றொன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிடக் கழகத்திற்கு தானிய சேமிப்புக் கிடங்காகவும் பயன்பட்டு வருகின்றது. காரணம் அப்பொழுது வேறு இடங்களில் இருந்து விண்ணப்பங்கள் வரவில்லை.

[1984 மார்ச் 24

(ஆ) மற்றும் (இ) மார்த்தாண்டம் தொழிற்பேட்டையில் கயிறு மெத்தை தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. ஆனால் கன்னியாகுமரி மாவட்டம் ஏழுதேசம் கிராமத்தில் ஆதி திராவிடர் நலனுக்காக ஒரு கயிறு மெத்தை தயாரிக்கும் கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

(முற்பகல் 10-20)

திரு டி. மணி : தலைவரவர்களே, இந்த மார்த்தாண்டம் தொழிற் பேட்டை என்று சொல்லப்படுகின்ற இடத்தில் நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு கிடங்கு வசதிக்காக இடம் கொடுத்துள்ளதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்ற அடிப்படையில் அங்கே தொழில் தொடங்குவது என்று சொல்லுகிறபோது கயிறு தொழில் வந்திருக்கிறது. அதைப் புதிதாக ஆரம்பிக்க வேண்டுமென்றால், புதிய யூனிட் ஒன்றைத் தொடங்க, போதுமான இட வசதிஅந்தத் தொழிற்பேட்டையில்தான் இருக்கிறது. எனவே நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுத்த இடத்தை திரும்ப எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுக்கப் பட்டுள்ள கூடத்தை திரும்பப் பெற்று, சிறு தொழில்கள் நடத்த கொடுக்க வேண்டுமென்று சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தை அணுகியபோது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொதுமக்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருள்களை வழங்கும் சேவையில் ஈடுபட்டுள்ளதாலும், அந்தக் கூடத்திற்கு உள்ள முழு பணத்தையும் அவர்கள் கட்டி விட்டதாலும் அந்த இடத்தைத் திரும்பப் பெற முடியாது என்று சிறு தொழில் வளர்ச் சிக் கழகம் தெரிவித்து விட்டது.

திரு. டி. மணி : தலைவரவர்களே, நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு அந்த இடத்தைக் கொடுக்கப் போகிறார்கள் என்ற தகவலை அறிந்தவுடனே நான் அந்தத் துறைக்கு கடிதம் எழுதினேன். தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் அந்த இடத்தை வேறு காரியங்களுக்குப் பயன் படுத்தக் கூடாது, தொழில்கள் தொடங்குவதற்கே பயன்படுத்த வேண்டும் என்று எழுதியிருந்தேன். அதை ஏற்க முடியாது என்று இப்போது சொல்கிறார்கள். ரப்பரையும் தேங்காய் மட்டையையும் அடிப்படையாக வைத்து அங்கே தொழில் தொடங்கப்பட்டால்தான் கயிறு தொழிலைப் பாதுகாக்க முடியும். எனவே இதை புனர் பரிசீலனை செய்து, முன்னால் இருந்த இடத்திற்கே நுகர்பொருள் வாணிபக் கழகத்தை மாற்ற நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 24]

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : தலைவரவர்களே, மாற்று இடம் இல்லாத காரணத்தால்தான் அந்தக் கூடத்தை நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப் படும்.

கோபி சட்டமன்றத் தொகுதியில் சிறுதொழில் துவக்கும் திட்டம்

446—*வினா எண் 22658 திரு கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் கோபி சட்டமன்றத் தொகுதி யில் சிறு தொழில் துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன தொழில்கள் துவங்க உள் ளது ?

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, மாண்பு மிகு அமைச்சரவர்கள் வினாவிற்கு இடமில்லை என்று சொன்னார் கள். கோபி தொகுதியில் தனியாக 32 சிறு தொழில்களைத் தொடங்குவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலேயே தலா 500 ரூபாய் கட்டியிருக்கிறார்கள். தொழில் மைய மேலாளர் அவர்கள் பவளமலையில் தொழில் மையம் அமைக்க, நிலத்தை ஆர்ஜிதம் செய்ய பார்வையிட்டிருக்கிறார்கள். அந்த விவரம் அமைச்சரிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் சுய, வேலை வாய்ப்பு முயற்சியில் ஈடுபடுகின்றவர்களுக்குத் தேவை யான எல்லா வசதிகளையும் அரசு செய்து கொடுக்கிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, பெரி யார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கோபி போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் வேளாண்மையை நம்பி வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே தொழில் மையம் உரு வாக்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே. தமிழக அரசும் மத்திய அரசும் தமிழ் நாட்டிலே சில பகுதிகளை 'பாக்வெர்டு ஏரியா' என்று அறிவித்திருக்கின்றன. அந்த வகை யில் பார்க்கும்போது கோபி சட்டமன்ற தொகுதி தொழில் வளர்ச்சியில் முன்னேறிய பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் தற்போது அங்கே எந்தவிதமான தொழிலும் தொடங்குவதற்கு இல்லை.